# Tamil Nadu Electricity Board Engineers' Sangam
## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)
(Affiliated to All India Federation of Power Diploma Engineers)
144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.
44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014
Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| Er. A.ANTONYPADOVARAJ | Er. V. ASHOKKUMAR | Er. R.BADRINARAYANAN |


பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.எண்.1/எண்.63 /தேதி 06.01.2016.

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் – பட்டயப் பொறியாளர்களின் உள்முகத்தேர்வு, பதவி உயர்வுகள், முன்னுரிமை போன்றவை பணியமைப்பு நிர்வாகத்தால் வேண்டுமென்றே தாமதப்படுத்தப்பட்டு வருகின்றது – சரிசெய்திட வேண்டி – தீர்மானம் அளித்தல் – தொடர்பாக.

பார்வை: பொறியாளர் சங்க மாநில செயற்க்குழு கூட்ட தீர்மானம் நாள் 03.01.2016.

---

வணக்கம்.

பட்டயப் பொறியாளர்களின் உள்முகத்தேர்வு, பதவி உயர்வுகள், முன்னுரிமை போன்றவை பணியமைப்பு நிர்வாகத்தால் வேண்டுமென்றே மிகுந்த தாமதப்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக:

- உள்முகத்தேர்வு உதவிப் பொறியாளர்கள் பட்டியல் அனுமதிப்பதில் எந்த இடையூறும் இல்லாத நிலையில் அனைத்து தகவல்களும் முழுமையாக பணியமைப்பு நிர்வாகத்தில் பெறப்பட்ட போதிலும், வாரியத்தில் பணியாற்றிவரும் பணியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படச் செய்து இனிமேல் வாரியப்பணிக்கு நியமிக்கப்பட உத்தேசித்துள்ள உதவிப் பொறியாளர்கள் (பட்டப் பொறியாளர்கள்) நேரடி நியமனத்திற்கு (தற்போது வாரியத்திலே இல்லாதவர்களுக்காக) சாதகமாக பணியமைப்பு நிர்வாகம் தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

கடந்த 21.12.2015 அன்று வாரியத்தலைவர் அவர்கள் உள்முகத்தேர்வு அனுமதித்தல் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள குறிப்பிட்டும் 31.12.2015 வரை பணியமைப்பு நிர்வாகம் உள்முகத்தேர்வு பட்டியலை அனுமதிக்காமல் வாரியப் பணியாளர்கள் நலனுக்கு எதிராக பட்டப் பொறியாளர்களுக்கு ஆதரவாக வேண்டுமென்றே பாரபட்சமான முறையில் செயல்பட்டுள்ளது. இதனால் வாரியப்பணியாளர்களின் முன்னுரிமையும் எதிர்காலமும் மிகுந்து பாதிக்கப்பட்டுள்ளது.

- இளநிலைப் பொறியாளர் முதல் நிலை (மின்னியல்) பதவி உயர்வுக்கு தகவல் கேட்டு இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் 12.11.2015ல் பதவி உயர்வு பட்டியல் 205 நபர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. 20.11.2015ல் இதற்கு பெறப்பட்டுள்ள நீதிமன்ற தடையை நீக்கி பதவி உயர்வு வழங்கிட பணியமைப்பு நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது.

- உதவிப் பொறியாளர் (மின்னியல்) முன்னுரிமை பட்டியலுக்கு (2005 Batch) எந்த நீதிமன்ற தடையும் இல்லாத போதிலும், நேரடி நியமன பட்டப் பொறியாளர்களுக்கு ஆதரவாக முன்னுரிமைப் பட்டியலை எந்த விசாரணையும் செய்யாமல் திரும்பப்பெற்றுள்ளது. சங்கம் எழுத்துபூர்வமாக தெளிவுபடுத்திய பின்னரும் உதவிப் பொறியாளர் முன்னுரிமை பட்டியல் வெளியிடவும், இதனைத் தொடர்ந்து உதவி செயற் பொறியாளர் – பதவி உயர்வுக்கு தகவல் கேட்டிடவும் மிகுந்த காலதாமதம் செய்யப்பட்டுள்ளது. இதனால் பட்டப் பொறியாளர்களால் மீண்டும் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு பதவி உயர்வுகள் தடைசெய்யப்பட்டுள்ளது.

- உதவி செயற் பொறியாளர் / இயந்திரவியல் பதவி உயர்வுக்கு பணியிடங்கள் காலியாக இருந்தபோதும், 13.01.2016ல் பட்டியல் காலாவதியாகும் நிலையிலும் நிலுவையில் உள்ள பதவி உயர்வு வழங்கப்படாமல் மாதக்கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

- இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை மற்றும் இளநிலைப் பொறியாளர் முதல் நிலை – இயந்திரவியல் – முன்னுரிமைப் பட்டியல் அனுமதிக்காக பல மாதங்களாக காத்திருக்கின்றது. இதனால் இளநிலைப் பொறியாளர் முதல் நிலை மற்றும் இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை இயந்திரவியல் பதவி உயர்வுகள் ஆண்டுக்கணக்கில் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

- **தொழில்நுட்ப உதவியாளர் / உள்முகத்தேர்வுகள் மின்னியல் மற்றும் இயந்திரவியலும் குறிப்பிட்ட தேதிக்கு பின்னரும் அனுமதிக்கப்படாமல் உள்ளது.**

மேற்கூறியவைகளை ஆழ்ந்து பரிசீலித்த பொறியாளர் சங்க மாநில செயற்குழு கீழ்காணும் தீர்மானத்தை ஏகமனதாக இயற்றியுள்ளது.

<u>தீர்மானம் எண்.3</u>

<u>பணியமைப்பு நிர்வாகத்தால் தாமதப்படுத்தப்பட்டுவரும்;</u>

- உதவிப் பொறியாளர் உள்முகத்தேர்வு (மின்னியல், இயந்திரவியல், பொதுவியல்) மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல், இயந்திரவியல்) பட்டியலை அனுமதித்து பணி நியமன உத்தரவுகளை உடனடியாக வழங்கிடவும்
- இளநிலைப் பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வுக்கு வழங்கப்பட்டுள்ள நீதிமன்ற தடையை நீக்கி உடனடியாக பதவி உயர்வு வழங்கிடவும்
- உதவிப் பொறியாளர் மின்னியல் முன்னுரிமை பட்டியலுக்கான நீதிமன்ற தடையை நீக்கி உதவிப் பொறியாளர் முன்னுரிமையையும், உதவி செயற் பொறியாளர் பதவி உயர்விற்கான நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொண்டிடவும்
- இயந்திரவியல் பிரிவில் இளநிலைப் பொறியாளர் முதல் நிலை மற்றும் இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை பதவி உயர்வுகள் உடனே வழங்கிடவும்
- உதவி செயற் பொறியளர் இயந்திரவியல் பதவி உயர்வுகள் உடனடியாக வழங்கிடவும்

பணியமைப்பு நிர்வாகம் பாரபட்சமற்ற முறையில் பணியாற்றி பட்டயப் பொறியாளர்களுக்கான பதவி உயர்வுகள் முன்னுரிமை போன்றவற்றை பாதிப்பின்றி விரைந்து வழங்கிட அறிவுறுத்தி பணியமைப்பு நிர்வாகத்திற்கு உத்தரவிட மாநில செயற்குழு வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

( வி. அசோக்குமார் )
பொதுச் செயலாளர்.

நகல்
உறுப்பினர்கள் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
செயலாளர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தொழிலாளர் நல ஆணையர் / தமிழக அரசு.
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
தொழில் நல்லுறவு ஆலோசகர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.